**தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டம்**

***100 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. செ. முத்துசாமி மற்றும் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்)** : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) தனியார் பள்ளிகளை (முறைப்படுத்துதல்) சட்டம், அச் சட்டத்தின்கீழ் வகுத்த விதிகள், ஆகியவைகளில் உள்ள குறைபாடுகள் குறித்து ஆராய, குழு ஏதும் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : (அ) மற்றும் (இ) தமிழ் நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் வரன்முறைச் சட்டம், 1973 மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகள் ஆகியவற்றில் காணப்படும் குறைகள் குறித்து ஆராய்வதற்கும் பரிசீலிப்பதற்கும், பள்ளிக் கல்வி இயக்குநரின் தலைமையில் பத்து உறுப்பினர்கள் கொண்ட நிபுணர்குழு ஒன்று அரசாணை நிலை எண் 249, கல்வி, நாள் 12—2—1982-ல் அமைக்கப்பட்டுள்ளது. குழு, மேற்சொன்ன பணியினை, மேற்கொண்டு செயற்பட்டு வருகின்றது. குழுவின் பரிந்துரைகள் இன்னமும் அரசிற்குக் கிடைக்கவில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம்** : அக்குழுவின் பரிந்துரை கிடைக்கப் படுமானால், வரும் கல்வியாண்டிலேயே நடைமுறைப்படுத்துகிற யோசனை அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : அந்த அறிக்கை கிடைத்தவுடன், அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்கும். இதற்கிடையிலே சட்டமன்றப் பேரவையில் ஒரு சட்ட முன்வடிவைத் தாக்கல் செய்திருக்கிறோம். தனியார் பள்ளிகள், தனியார் கல்லூரிகள் ஆகியவற்றில் அரசின் அனுமதியைப் பெறாமல் வகுப்புக்களை மூடவோ, எண்ணிக்கையைக் குறைக்கவோ கூடாது என்று கட்டுப்படுத்தும் நிலையில் ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம்.

**செல்வி ஆ. லீலாவதி** : இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்ததற்காக தனியார் பள்ளி ஆசிரியர்களின் சார்பாக நான் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரிடையாக அரசே சம்பளம் வழங்க துரித நடவடிக்கையை அரசு எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : அதுபற்றி அரசு ஆராயும்.